3 அறிவிப்பு.

நன்செய்த் தீர்வை, கூடுதல் நன்செய்த் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி, தனி தனித் தண்ணீர் மேல்வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூடுதல் நன்செய்த் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி, தனி நன்செய்த் தீர்வை, தனித் தண்ணீர் மேல்வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்

அ. கூடுதல் நன்செய்த் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி, தனி நன்செய்த் தீர்வை, தனித் தண்ணீர் மேல்வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு கூடுதல் நன்செய்த் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி, தனி நன்செய்த் தீர்வை, தனித் தண்ணீர் மேல்வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

ஆ. வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு 1980.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, "தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை" பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

1980 ஜூலை 11]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

5. அறிக்கை அளித்தல்

அமைச்சர் மானியக் கோரிக்கை விவாதத்திற்கு அளித்த பதிலில் திருத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 107-இன் கீழ் மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சரவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 10—7—1980-ல் வனம் மற்றும் சின்கோனா துறை சம்பந்தப்பட்ட கோரிக்கை மீது நடந்த விவாதத்தின்போது நான் பதிலளிக்கையில், திருப்பத்தூர் அருகில் சந்தன எண்ணெய் உற்பத்தித் தொழிற்சாலை நிறுவுவதற்கு ஏற்பாடாகி வருகிறது என்றும், அதற்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டதென்றும் குறிப்பிட்டுள்ளேன். இந்தக் குறிப்பின் மீது மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. ப. சுந்தரம் அவர்கள் சந்தன எண்ணெய் தொழிற்சாலைக்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருந்தால், இது தனியார் நிலமா, அல்லது வேறு நிலமா, தனியார் நிலமானால் அந்த நிலத்தின் உரிமையாளர் யார் என்று குறிப்பிட முடியுமா என்று வினா எழுப்பினார். இவ்வினாவிற்கு பதில் அளிக்கும் முறையில், என்னிடம் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டதென்ற தகவல் மட்டும் உள்ளது. ஆனால், வேறு விவரங்கள் இல்லையென்று பதில் அளித்தேன். இதில் ஒரு சிறு மாற்றத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருப்பத்தூரில் 5.54 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் அது சந்தன கட்டைகளை சேமிக்க ஒரு கிடங்கு கட்டவே அன்றி, சந்தனத் தைல தொழிற்சாலைக்கு அல்ல என்ற விளக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.